[1971 டிசம்பர் 15

செங்கற்பட்டு மாவட்டத்தில் வறட்சி நிலே

*419 வின—திரு. ஆ. பரந்தாமன்: மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பருவமழை பொய்த்ததன் காரணமாகச் செங்கற்பட்டு மாவட்டம் முழுவதும் வறட்சி நிலே நிலவுகிறதென்பதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், அரசு எடுத்த துயர் தணிப்பு நடவடிக்கைகளின் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம். (அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் வறட்சி நிலேமைகள் நிலவுவதாகச் சொல்ல முடியாது.

(இ) இவ்வினவிற்கு இடமில்லே.

கிராம அலுவலர் பதவிகள்

*420 வின—திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

20—12—1970-ம் தேதிக்கு முன் கிராம அதிகாரிகள் பதவிகளுக்குத் தேர்வு எழுதி வெற்றி பெற்றவர்களுக்கு எஸ்.எஸ்.எல்.சி. பூர்த்தி செய்திருக்க வேண்டுமென்ற விதியினின்றும் விலக்களிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனேயிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லே.

திரு. கோ. இளங்கோவன்: கிராமாதிகாரியாக விரும்பும் ஒருவர் எஸ்.எஸ்.எல்.சி. பூர்த்தி செய்திருக்க வேண்டுமென்று 20—12—1970-ல் அரசு விதித்திருப்பதாக அறிகிறேன். அதற்கு முன்னதாக அந்த விதி இல்லேயென்று சொல்லப்படுகிறது. அந்த வேலே கிடைக்குமென்று கருதி சிலர் முன்னதாகவே அந்தத் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றிருக்கிருர்கள். அவர்கள் இப்போது வேலே இல்லாது தவிக்கிருர்கள். இந்த நிலேபற்றி அரசு பரிசிலிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தேர்வு பெற்றவர்களுக்கெல்லாம் வேலே கொடுப்பது என்பதில்லே. அரசாங்க வேலேக்கு என்ன தகுதி என்று இப்போது உத்தரவு போடப்பட்டிருக்கிறதோ அதன்படிதான் ஆட்கள் நியமிக்கப்படுவார்கள்.

உயர்நீதிமன்றத்திலுள்ள ரிட் மனுக்கள்

*421 வின—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உயர்நீதி மன்றத்தில் 13—7—1971-ல் ஓர் ஆண்டு முடிந்தும் முடிவு பெருமல் இருக்கும் ரிட் மனுக்கள் எவ்வளவு?

(இ) இதைத் துரிதமாக முடிக்க அரசு மேற்கொண்டு உள்ள நடவடிக்கை என்ன?